DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.9/2023

**prosecution witness: LW-3 as PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனி | தொழில் | : | ஆட்டோ ஓட்டுநர் |
| த/பெ. | : | சின்னச்சாமி | வயது | : | 32 |
| ஊர் | : | மண்டபம் கேம்ப் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>03.02.2026</u>

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>**முதல் விசாரணை:-**</u>

1. நான் தற்போது மண்டபம் கேம்ப்பில் வசித்து ஆட்டோ ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். நான் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக ஆட்டோ ஓட்டி வருகிறேன். ராஜ்குமார் என்ற சம்பூர்ணலிங்கம் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். வாகன விபத்து ஏற்பட்டபோதுதான் தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். சாட்சி களஞ்சியராஜாவை தெரியும் அவரும் ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறார். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு நான் மண்டபம் ஆட்டோ ஸ்டாண்டில் நானும், களஞ்சியராஜா என்பவரும் இருந்தபோது வண்டி உச்சிப்புளி நோக்கி சென்ற குட்டியானை (டாடா ஏசிஇ) வாகனம் வேகமாக வந்து இரவு சுமார் 8.30 மணியளவில் ராஜ்குமார் என்ற சம்பூர்ணலிங்கம் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. அந்த வண்டியை ஓட்டியவர் யார் என்று தெரியாது. விபத்தில் காயம்பட்ட நபரை ஆம்புலன்சில் ஏற்றி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்றுவிட்டனர். நான் சவாரி ஏற்றி சென்றுவிட்டேன். அதற்கு பிறகு எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. இறந்துபோன நபர் திடீரென சாலையைக் கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இறந்துபோன நபர் குடிபோதையில் இருந்தாரா என்றால் பொதுவாக குடிப்பார் அன்றைய தினம் குடித்திருந்தாரா என்று தெரியவில்லை. என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் களஞ்சியராஜா இருந்தார். அந்த பகுதியில் கடைகள் நிறைய இருந்தன என்றால் இருந்தது. போலீசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால மறுநாள் மாலை விசாரித்தார்கள்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.03 10:14:44 +0530

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.9/2023

**prosecution witness: LW-2 as PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | களஞ்சியராஜா | தொழில் | : | ஆட்டோ ஓட்டுநர் |
| த/பெ. | : | லெட்சுமணன் | வயது | : | 31 |
| ஊர் | : | மண்டபம் கேம்ப் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>03.02.2026</u>

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>**முதல் விசாரணை:-**</u>

1. நான் தற்போது மண்டபம் கேம்ப்பில் வசித்து ஆட்டோ ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கில் விபத்தில் காயம்பட்டு இறந்துபோன ராஜ்குமார் என்ற சம்பூர்ணலிங்கம் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர்தான் சம்பவ சமயத்தில் வாகனத்தை ஓட்டியவர். கடந்த 7 வருடங்களுக்கு முன்பு நான் மண்டபம் கேம்ப் ஆட்டோ ஸ்டாண்டில்நான் இருந்தபோது மண்டபத்தில் இருந்து உச்சிப்புளி நோக்கி வந்த டாடா ஏசிஇ வாகனம் சென்றது. அதன் பதிவெண் தெரியாது. அந்த வாகனத்தை ஓட்டியவர் ஆஜர் எதிரிதான். அப்போது இரவு 9.45 மணி இருக்கும் இறந்துபோன ராஜ்குமார் என்ற சம்பூரணலிங்கம் என்பவர் ரோட்டை கடந்து செல்லும்போது எதிரி ஓட்டி வந்த டாடா ஏசிஇ வாகனம் அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. உடனே அந்த விபத்தை பார்த்த நானும், பழனி மற்றும் துரை அக்கம்பக்கம் உள்ளவர்கள் அவரை தூக்கி போன் செய்து ஆம்புலன்சில் மண்டபம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம்.

2. அங்கிருந்து மேல்சிகிச்சைக்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அவருக்கு விபத்து ஏற்பட்டவுடன் ராஜ்குமார் என்ற சம்பூரணலிங்கத்தை பார்த்தபோது தலையில் அடிபட்டு இரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது. கையில் சிராய்ப்பு காயம் இருந்தது. மேல்சிகிச்சையில் இருந்த ராஜ்குமார் என்ற சம்பூரணலிங்கம் சிகிச்சை பலனின்றி சுமார் 7 நாட்கள் கழித்து இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் காலையில் 7.45 மணியளவில் ஆட்டோ ஸ்டாண்ட்டில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்து 10 நிமிடத்தில் மண்டபம் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அப்போது என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். ஆம்புலன்சுக்கு யார் போன் செய்தார்கள் என்றால் ஆட்டோ ஸ்டாண்ட்டில் உள்ளவர்களும் பக்கத்தில் இருந்தவர்களும், போலீசாரும் போன் செய்தார்கள். இறந்துபோனவரை எப்படி தெரியும் என்றால் அவர் அந்த பகுதியில் குடித்துவிட்டு அந்த பகுதியில் திரிவார்கள். அவருக்கு மனைவி, குழந்தைகள் உள்ளதா என்றால் முன்னர் இருந்ததாக கூறியுள்ளார். தற்போது இல்லை. அவர் மனநலம் பாதிக்கப்பட்டவராக இருப்பார் என்றால் இல்லை தெளிவாகத்தான் இருந்தார்.

2. எனது ஆட்டோ ஸ்டாண்ட் வடக்கு திசையில் இருக்கிறது அவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டைக் கடந்தார். அன்றைய தினமும் குடிபோதையில் இருந்தாரா என்றால் இருந்திருக்கலாம். எனக்கு தெரியாது. இறந்த நபர் என்னுடன் பேசிக்கொண்டிருந்தாரா என்றால் இல்லை. இறந்துபோன நபர் திடீரென ரோட்டை கடந்ததால் அவர் அடிபட்டார் என்றால் சரிதான். எதிரியின் பெயர் விபரம் சம்பவம் நடப்பதற்கு முன்பே தெரியுமா என்றால தெரியாது. நான் போலீசார் விசாரணையில் எதிரியின் பெயர் விபரம் ஏதுவும் சொல்லவில்லை. போலீசார் வரும்போது எதிரி அந்த இடத்தில் இருந்தாரா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எதிரிதான் வாகனத்தை ஓட்டி வந்தாரா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றாலும் போலீசார் சொல்லிக்கொடுத்ததற்கிணங்க எதிரி வாகனம் ஓட்டி வந்தார் என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.02.03 10:14:48 +0530